இருக்கின்ற நிதிநிலை பற்றாக்குறையின் காரணமாகத்தான் அங்கே சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க இயலாது என்று தெரிவித்தேன். எம்.யூ.டி.எஃப். என்று சொல்லுகின்ற அந்த உலக வங்கி திட்டத்தின் மூலமாக கடன் உதவி பெறுகின்ற நிலை காரைக்குடி நகராட்சிக்கு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. காரணம் உலக வங்கி நிதியைப் பொறுத்தவரை, ஒரு நிதியைப் பெறுகின்றபோது அந்த நிதியைத் திருப்பி கட்டக்கூடிய தன்மை இருக்க வேண்டும். அதற்குண்டான தகுதி இருக்க வேண்டும். பினான்ஷியல் ஃபீசிபிளிட்டி என்று சொல்லுகின்ற அந்த நகராட்சியினுடைய நிதிநிலை நல்ல நிலையிலே இருந்தால், அதை திருப்பிச் செலுத்தக் கூடிய—அந்த பெறுகின்ற கடனை திருப்பி செலுத்தக் கூடிய ஒரு நிலைமை - இருந்தால் அதைப் பெறலாம். ஆனால் இன்றைக்கு காரைக்குடி நகராட்சியிலே அந்த நிலைமை இல்லை. அங்கே இருக்கின்ற நிதியாதாரத்தை பெருக்கிவிட்டுத்தான் எம்.யூ.டி.எஃப்.-க்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு அதையும் மீறி கடந்த மார்ச் மாதம் மட்டும் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுமார் 4 அடி குழல் விளக்குகள் இன்றைக்கு 142-க்கு அந்த நகராட்சியினுடைய நிதியிலிருந்து 1 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மின்சார வாரியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. விரைவில் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 220—டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

220—

பால்ஊத்துக்காட்டில் தொடக்கப்பள்ளி துவங்குதல்

***23087**—*டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, பால்ஊத்துக்காட்டில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் ஒரு தொடக்கப்பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தேவை மற்றும் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு வரும் கல்வி ஆண்டில் கல்வித் துறையின் மூலம் பரிந்துரை செய்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 4]

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தங்கத் தலைவி, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால அரசு தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அனைத்து நிலையிலும் உயரவேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது. 2 ஆயிரம் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் 36 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து புதிய பரிசு திட்டம் ஒன்றை உருவாக்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவ சமுதாயத்தின் சார்பில் நன்றியை காணிக்கையாக்கி, சங்ககிரி ஒன்றியம் பால்ஊத்துக்காட்டில் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் தொடக்கப்பள்ளி இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையை, நிதிநிலையைக் கருத்தில் கொண்டு கல்வித் துறையின் சம்மதத்துடன் புதிய ஆரம்பப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன. சங்ககிரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, பால்ஊத்துக்காட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் ஆரம்பப்பள்ளி துவங்கிட இந்த ஆண்டு கல்வித் துறையின் மூலம் உருவாக்கப்பட இருக்கிற 100 ஆரம்பப் பள்ளிகளில் நம்முடைய துறையின் மூலமாக பரிந்துரைக்கப்பட்டு நானும் மேற்படி கல்வித்துறை அமைச்சர் அவர்களோடு பேசியிருக்கிறேன். அதன் அடிப்படையில் வருகிற கல்வி ஆண்டில் 1995-96 ஆம் ஆண்டில் பால்ஊத்துக்காட்டில் ஆரம்பப் பள்ளி திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையில் கல்வியில் சேலம் மாவட்டம் தமிழகத்தில் முதல் இடத்தில் இருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்து ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் ஆதரவு திட்டத்தை அமல் செய்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுக்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில் பால்ஊத்துக்காடு மற்றும் அதைச் சுற்றியுள்ள காலனிகளிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம் சென்று 50 மாணவர்கள் படித்து வருகிறார்கள். நடப்பு ஆண்டில் அதைச் செயல்படுத்தவேண்டுமென்று அன்போடு கேட்டு அதை இந்த ஆண்டில் செயல்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லுகிறபோதே இந்த ஆண்டு திறக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். 1995-96 நிதி ஆண்டில் கண்டிப்பாக கல்வித் துறையின் மூலமாக திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.